## 2016 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

1983 ஆம் ஆண்டின் 01 ஆம் திகதி தொடக்கம் 2009 மே மாதம் 18 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியினுள் இலங்கையின் பயங்கரவாத செயற்பாடுகளின் காரணமாக காணிகள் உட்பட தமது அசைவற்ற ஆதனங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்காக வழக்கு தொடுக்க முடியாதிருந்த ஆட்களுக்காக விசேட சட்டமுறையான ஏற்பாடுகளைச் செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் 2016 ஏப்பிரல் மாதம் வலுப்படுத்தப்பட்டது.

சட்டத்தின்படி, காணிகள் உட்பட ஏதேனுமொரு அசைவற்ற ஆதனத்திற்காக செல்லுபடியான சட்டமுறையான உரிமையைக் கொண்டுள்ள எவரேனும் ஆளொருவர் (ஆதனங்களின் சட்டமுறையான உரிமையாளராக) "அனுகூலம் குறைந்த ஆள்" ஆக இருப்பின் (1983 மே மாதம் 01 ஆம் திகதி ஆரம்பித்து 2009 மே மாதம் 18 ஆம் திகதி முடிவடையும் காலப் பகுதியினுள் ஏதேனுமொரு போராடும் பயங்கரவாதக் குழுவொன்றின் செயற்பாடுகளின் காரணமாக நிலவிய சூழ்நிலை விடயங்களின் விளைவாக, காணிகள் உட்பட ஏதேனுமொரு அசைவற்ற ஆதனத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்காக நீதிமன்றத்தில் தனது உரிமைகளை நடைமுறைப்படுத்திக் கொள்ள முடியாதிருந்த ஆளொருவர் "அனுகூலம் குறைந்த ஆள்" என வரைவிலக்கணம் கூறப்படுகிறது) ஆட்சியுரிமையின் ஊடாக உரித்து கோரும் வேறு எவரேனும் ஆளொருவரால் அவ்வாதனங்களின் உடைமையை அல்லது ஆட்சியை வகித்துக் கொண்டிருப்பினும், அவ்வாறு அனுகூலம் குறைந்த ஆளுக்கு அவரது ஆதனங்களுக்கு உரித்துக் கோர முடிகிறது.

"அனுகூலம் குறைந்த ஆளொருவருக்கு" சட்டத்தால் ஏற்படுத்துகின்ற நன்மையை, சட்டம் அமுல்படுத்தும் திகதி தொடக்கம் இரு வருட காலப் பகுதிக்குள் கொள்வதற்கு உரித்து உள்ளதென சட்டத்தின் 4ஆம் பிரிவினால் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சட்டம் அமுல்பட ஆரம்பித்த திகதி 2016 ஏப்பிரல் மாதம் 26ஆம் திகதி (சபாநாயகரின் சான்றிதழின் குறிப்பிட்டுள்ள திகதியாகிய) என்பதால் சட்டம் அமுல்படவுள்ள காலப்பகுதி 2018 ஏப்பிரல் மாதம் 26 ஆம் திகதியில் முடிவடைகிறது.

ஆதலால் எவரேனும் ஆளொருவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவரது /அவர்களினது ஆதனங்களை மீளப் பெறுவதற்காக உரித்துகளைச் சமர்ப்பிப்பதற்கு விரும்புகின்றார்களாயின், அத்தகைய உரித்து கோரிக்கைகள் 2018 ஏப்பிரல் மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

மும்மொழிகளாலும் தயார் செய்யப்பட்ட சட்டத்தின் இலத்திரன் பிரதிகளை நீதி அமைச்சின் http://moj.gov.lk என்னும் உத்தியோகபூர்வ இணையத் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இச் சட்டத்தில் உள்ளடங்கிய விடயங்கள் பற்றி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் புரிந்துணர்வு அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரகாரம் சட்டமுறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விரும்புகின்ற ஆளொருவர் இருப்பின் அவருக்கு சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடிகிறது.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2016 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

*(2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2016, ஏப்பிறல் மாதம் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

12/15

அத்தகைய உடைமையின் பயனைக் கொண்டு காணி உட்பட அத்தகைய அசையா ஆதனத்திற்கு (68 ஆம் அத்தியாயமான) ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் உரித்துடைமையை அத்தகைய வேறு ஆளிற்கு வழங்குவதாகக் கருதப்படுதலாகாது.

எடுத்துக்காட்டு

'B' என்பவர் 'A' யினுடைய காணியில் உடைமையைத் தொடங்கும் நேரத்தில் 'A' என்பவர் அனுகூலம் குறைந்த ஆள் ஒருவர் ஆவார். 'A' என்பவர் அனுகூலம் குறைந்த ஆள் ஒருவராகத் தொடர்ந்திருக்கும் வரை 'A' என்பவருக்கு எதிராக ஆட்சியுரிமை தொடங்க மாட்டாது.

(2) (68 ஆம் அத்தியாயமான) ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், எவரேனும் உரிமை கோருகின்ற ஆளினால் அல்லது அவர், எவர்களின்கீழ் உரிமை கோருகின்றாரோ அவர்களினால், காணி உட்பட ஏதேனும் அசையா ஆதனத்தின் முப்பது வருடங்களுக்குப் பாதகமான மற்றும் தொடர்ச்சியான உடைமை, எவ்வாளுக்கு எதிராக அப்பாதகமான மற்றும் தொடர்ச்சியான உடைமை கோரப்படுகின்றதோ அவ்வாள் அனுகூலம் குறைந்த ஆள் ஒருவராக இருக்குமிடத்து (68 ஆம் அத்தியாயமான) ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலான உரித்திற்கான முடிவான எண்பிப்பாகக் கருதப்படுதலாகாது.

ஐயத்தைத் தவிர்த்தல்.

3. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அனுகூலம் குறைந்த ஆள் ஒருவர் இறந்திருப்பின், எந்தக் காலப்பகுதியின்போது அவர் அவ்வாறு அனுகூலம் குறைந்தவராகவிருந்தாரோ அந்தக் காலப்பகுதி, அவருடைய மரபுரிமையாளர் அல்லது மரபுரிமையாளர்களின் நன்மைக்கென பழக்கப்படுத்தல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய மரபுரிமையாளர் அல்லது மரபுரிமையாளர்கள் இச்சட்டத்தின் 2 ஆம் உட்பிரிவின்கீழ் அனுகூலம் குறைந்த ஆள் ஒருவருக்கு வழங்கப்பட்ட நன்மைகளிற்கு உரித்துள்ளவர்களாதலும் வேண்டும்.

13/15

4. காணி உட்பட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை மீளப் பெறுவதற்காக அவருடைய உரிமைகளைத் தொடருவதற்கு இயலாதவராக இருந்தவரான அனுகூலம் குறைந்த ஆளொருவர் இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததற்குப் பின்னர் இரண்டு வருடங்களினுள் இச்சட்டத்தினால் அளிக்கப்பட்ட நன்மைகளைப் பயன்படுத்துவதற்கு அவர் வழக்கொன்றைத் தொடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

அனுகூலம் குறைந்த ஆளொருவர் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியின் பின்னர் இரண்டு வருடங்களினுள் இச்சட்டத்திலிருந்தான நன்மைகளுக்கு உரித்துடையவராதல்.

5. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம், 1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காணி அளிப்பு (சிறப்பேற்பாடுகள்) சட்டம் அல்லது (454ஆம் அத்தியாயமான) அரச காணிகள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின்கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் காணிக்கு அல்லது அது தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது.

சட்டத்தின் ஏற்பாடுகள் அரச காணிகளுக்கு ஏற்புடையதாகாமை.

6. இச்சட்டத்தில் -

பொருள் கோடல்.

"ஏதேனும் ஆயுதம் தாங்கிய பயங்கரவாதக் குழுவின் செயற்பாடுகள்" என்பது, 2013 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தில், "பயங்கரவாதச் செயல்" ஒன்றாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் செயல் எனப் பொருளாகும் ;

"அனுகூலம் குறைந்த ஆள்" என்பது, 1983, மே 1 ஆந்தேதியன்று தொடங்கி 2009, மே 18 ஆம் தேதியில் முடிவடைந்த காலப்பகுதியின் போது ஏதேனும் ஆயுதந்தாங்கிய பயங்கரவாதக் குழு எதனதும் செயற்பாடுகள் காரணமாக நிலவிய சூழ்நிலைகளின் விளைவாக எந்த ஆள், அவருடைய உரிமைகளை எந்த நீதிமன்றத்தில் தொடருவதற்கு அவர் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டிருந்தாரோ அந்த நீதிமன்றம் ஒன்றில் தனது உரிமைகளைத் தொடருவதற்கு இயலாதவராக இருந்தவரான அந்த ஆள் ஒருவர் எனப் பொருள்படும்.

7. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

14/15

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*

15/15